# ஆவியா? ஆவியானவரா?

யோவான். 5:17 இல் '*என்பிதா இதுவரைக்கும் கிரியை செய்து வருகிறார். நானும் கிரியை செய்து வருகிறேன்*' என்ற தம்மையும், தம் பிதாவையும் பற்றி மட்டுமே சாட்சிபடுத்தின நமது ஆண்டவர் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவரும் கிரியை செய்து வருகிறார் என்று கூறாமல் விட்டுவிட்டாரே ஏன்? நமது ஆண்டவர் பரிசுத்த ஆவியானவரை மறந்து விட்டாரா அல்லது மறுதலித்துவிட்டாரா? பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ததாக ஆதிஇ 1:2 வசனத்தை எடுத்துக்காட்டி பழையேற்பாட்டின் காலத்திலும் ஆவியானவர் இருந்தார் என்றால் நமது ஆண்டவர் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்து வருகிறார் என்று கூறவில்லையே! ஏன்?

யோவா. 5:22ல் '*அன்றியும் எல்லாரும் பிதாவைக் கனம் பண்ணுகிறது போல, குமாரனையும் கனம் பண்ணும்படிக்கு* (இருவரை மாத்திரம் கனம் பண்ணும்படிக்கு) *பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத் தீர்ப்பு செய்யாமல், நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்*' என்கிறது வேதம். அப்படியானால் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவருக்கு வேலை எதுவும் ஏன் கொடுக்கவில்லை?

யோவான் 5:31,32 : 8:17,18 வசனங்களில் "*இரண்டு பேருடைய சாட்சி உண்மையென்று உங்கள் நியாயப் பிரமாணத்தில் எழுதியிருக்கிறதே! நான் (யேசு) என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாய் இருக்கிறேன். என்னை அனுப்பின பிதாவும் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார்*" என்று இருவரைப் பற்றி மட்டுமே கூறின நமது ஆண்டவர் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவரும் தம்மைப்பற்றி சாட்சி கொடுக்கிறதாகக் கூறவில்லையே! ஏன்?

யோவா 10:30 ; 8:16,29 வசனங்களில் "*நானும், பிதாவும் (இருவர்) ஒன்றாயிருக்கிறோம்*" என்றும் "*நான் தனித்திருக்கவில்லை, நானும் என்னை அனுப்பினபிதாவுமாக (இருவர்) இருக்கிறோம்*" என்று குறிப்பிட்டுப் பேசின நமது ஆண்டவர் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவரைப் பற்றிப் பேசாமல் விட்டுவிட்டது ஏனோ? பிதாவும், குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் அல்லவா ஒன்றாயிருக்க வேண்டும்? ஏன் இருவரைப் பற்றி மட்டுமே யேசு குறிப்பிடுகிறார்?

யோவான். 14:1இல் "*உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக தேவனிடத்தில்* (பிதாவாகிய யாவே தேவனிடத்தில்) *விசுவாமாயிருங்கள் என்னிடத்திலும்* (குமாரனாகிய யேசு கிறிஸ்துவினிடத்தில்) *விசுவாச மாயிருங்கள்*" ; என்று கூறின நமது ஆண்டவர் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவரிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என்று கூறவில்லையே ஏன்?

யோவான் 14:10,11—ல் "*நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்*" என்று இருவரைப் பற்றி மட்டுமே கூறின நமது ஆண்டவர், பரிசுத்த ஆவியானர் என்ற ஒரு நபர் பிதாவோடும் குமாரனோடும் இருக்கிறதாகக் கூறவில்லையே ஏன்? இரட்சிப்பின் திட்டத்தில் மூவருக்கும் பங்கு இருக்குமானால் நான் பிதாவிலும், பிதா என்னிலும், பரிசுத்த ஆவியானவர் எங்களிலும் இருக்கிறதை நம்புங்கள் என்றல்லவா கூறியிருக்க வேண்டும்?

யோவா. 14:23 இல் பின்னும் நமது ஆண்டவர் கூறினதாவது "*ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் (பிதாவும், குமாரனும்) அவனிடத்தில் (இருவர் மாத்திரம்) அவனோடே வந்து வாசம் பண்ணுவோம்*" என்றே கூறுகிறார். மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவர் பற்றிய பேச்சே இங்கில்லையே! ஏன்?

யோவா 15:1 இல் "*என்பிதா திராட்சைத் தோட்டக்காரர் நான் திராட்சைத் செடி. நீங்கள் கொடிகள்*" என்று என் பிதா, குமாரன், பரிசுத்தவான்கள் பற்றி விளக்கம் கொடுத்த நமதாண்டவர் பரிசுத்தாவியானவர் என்ன நிலைமையில் உள்ளார் என்று இங்கு கூறவில்லையே? ஏன்?

யோவான். 16:3 இல் "*அவர்கள் பிதாவையும், என்னையும் அறியாதபடியினாலே*" (இருவரை) உங்கள் ஜெபாலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்" என்று கூறின நமதாண்டவர் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவரையும் அறியாதபடியினாலே என்று கூறாமல் விட்டுவிட்டாரே ஏன்?

"*பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்*" (யோவா. 16:15). அப்படியானால் பரிசுத்த ஆவியானவர் என்ற கடவுள் இருப்பாரானால் அவருக்கு ஒன்றும் கிடையாதா?

யேவான் 17:3 இல் 'ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும், (பிதா) நிர் அனுப்பினவராகிய யேசு கிறிஸ்துவையும் அறிவதே (இருவரை அறிவது) நித்திய ஜீவன்" என்று கூறின நமது ஆண்டவர் பரிசுதத ஆவியானவராகிய மூன்றாவது நபரை அறிவதைப் பற்றி குறிப்பிடவில்லையே? ஏன்?

யோவா. 17:21—ல் நமதாண்டவர் பிதாவிடம், "*பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் போல அவர்கள் எல்லோரும்* (பரித்தவான்கள் யாவரும்) *நம்மில் ஒன்றாயிருக்கவும்*" (குமாபிதாவோடும், குமாரனோடும் இருவரோடு மாத்திரம் ஐக்கியப்பட்டிருக்கவும்) *வேண்டிக் கொள்கிறேன்*" என்றல்லவா ஜெபிக்கிறார்? இங்கு மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவர் பிதாவோடும், குமாரனோடும் ஐக்கியப்பட்டிராமல் பிதாவோடும், குமாரனோடும் பரிசுத்தவான்கள் ஐக்கியப்பட்டிருப்பதாக அல்லவா நமது ஆண்டவர் தெளிவுபடுத்துகிறார்? பரிசுத்தாவியானவரின் ஐக்கியத்தைப் பற்றி ஏன் கூறவில்லை?

"*எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனோடும் இருக்கிறது*" 1 யோவா. 1:3. என்று கூறிய பரி.யோவான் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவரோடும் தமது ஐக்கியம் இருக்கிறது என்று ஏன் கூறவில்லை.

வெளி 5:13 இல் '*வானத்திலும், பூமியிலும், பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுள் அடங்கிய வஸ்துகள் யாவும் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர்க்கும்,* (பிதாவாகிய யாவே தேவனுக்கும்) *ஆட்டுக்குட்டியானவர்க்கும்* (குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும்) *ஸ்தோத்திரமும், கனமும், மகிமையும் உண்டாகுவதாக*" என்று சொல்லும்பொழுது பரிசுத்த ஆவியானவராகிய மூன்றாவது நபர்க்கு துதி, கனம், மகிமை செலுத்தப்படாதது ஏன்?

வெளி. 7:10 '*இரட்சிப்பின் மகிமை சிங்காசத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவர்க்கும் உண்டாவதாக*' என்று தேவதூதர்களும், 24 மூப்பர்களும் நான்கு ஜீவன்களும் பிதாவையும், குமாரனையும் தொழுது ஸ்தோத்திரிக்கும் பொழுது மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவர்கும் மகிமை உண்டாவதாக என்று தொழுது ஸ்தோத்திரிக்கவில்லையே! ஏன்?

பிதாவுக்குச் சிங்காசனம் குமாரனுக்கு சிங்காசனம் பரிசுத்தவான் களுக்குச் சிங்காசனம் 24 மூப்பர்க்குச் சிங்காசனம் என்று சொல்லியிருக்க பரிசுத்த ஆவியானவர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சிங்காசனத்தில் இருப்பதாகக் காட்டப்படவில்லையே! ஏன்?

பரிசுத்த ஆவி ஓர் ஆள் தத்துவமுடையவராக இருப்பாரானால் எல்லா இடங்களிலும் ஆள்தத்துவமுடையவராகவே பேசப்பட்டிருக்க வேண்டும். ஆனால் சில இடங்களில் ஆவியானவர் என்றும் பல இடங்களில் ஆவி என்று அஃறிணையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிற படியால், அது மொழி பெயர்ப்பாளர்களின் குழப்பமான செயலே காரணம். ஓரிடத்தில் பரிசுத்த ஆவி என அஃறிணையிலும் இன்னொரு இடத்தில் பரிசத்த ஆவியானவர் என ஆண்பால் உயர்திணையிலும் மொழி பெயர்த்து வைத்திருப்பதை பிடித்துக் கொண்டு பரிசுத்த ஆவி ஒரு தனி நபர். ஆள்தத்துவமுடையவர் என போதிப்பது வேதசத்தியத்திற்கு முரண்பாடானது.

பரிசுத்த ஆவி ஒரு நபரல்ல. ஆவியை நாம் பிதாவையும், குமாரனையும் கனம் பண்ணுவது போலக் கனம் பண்ணவும் தேவையில்லை. பரிசுத்த ஆவி உண்மையிலேயே உன்னதத்திலிருந்து வரும் உன்னதமான பெலமும், குணாம்சமும் தவிர மற்றபடி அல்ல.

IS HOLY SPIRIT A PERSON